# சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் மொழிப் பயன்பாடும் தற்காலத்தில் அவற்றின் போக்கும்: இந்து சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட நோக்குநிலை

**சிவஞானவதி, செ**[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*சடங்குகள் என்பது ஓர் இனத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்புக்களாகும். சடங்கு முறைகள் ஒவ்வொன்றும் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கோலங்களைச் சித்திரிக்கும் கருவிகளாகும். ஒரு மனிதன் பிறப்பது முதல் இறக்கும் வரை பல சடங்கு முறைகளுடன் கூடவே வாழ்ந்து வருகின்றான். மனித சமுதாயம் பயத்துடன் கூடிய பக்திமுறையாகச் சடங்கு நெறிமுறைகளைக் கைக்கொண்டு வருகின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையானது யாழ்ப்பாணப் பிரதேச இந்து சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் சடங்கு முறைகளுடன் வழிபாட்டு முறைகள் சிலவற்றில் பயன்படுத்தப்படும் மொழிப்பிரயோகத்தை, குறிப்பாகச் சடங்கு முறைகளில் பயன்படுத்தப்படும் சொற்பிரயோகங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் தற்காலப் போக்குப் பற்றியதாக அமைகிறது. இவ்ஆய்வுக்கட்டுரையானது யாழ்ப்பாண இந்து சமுதாயத்தில் சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் மொழிப்பயன்பாட்டினையும் அதன் சமகாலப்போக்கினையும் ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வானது விபரண ஆய்வு முறையியலாகவும் (Descriptive methodology) களஆய்வு முறையியலாகவும் அமைவதுடன் ஆய்வினுடைய நோக்கத்தை அடையும் வகையில் முதல்நிலைத் தரவாக அவதானிப்பு முறை (Observation method) பயன்படுத்தப்படுகிறது. இரண்டாம் நிலைத் தரவாக ஆய்வோடு தொடர்புடைய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆய்வு முடிவாக யாழ்ப்பாணப் பிரதேச இந்துசமுதாயத்தில் பயன்படுத்தப்படுகின்ற சடங்குகள் சார்ந்த பல சொற்கள் வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. அதற்கான காரணங்களாக, பிறநாட்டார் தொடர்பு, கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறம் நோக்கிய மக்கள் இடப்பெயர்வு, நாகரிகப்போக்கு, பிறமொழித் தாக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வகையில் ஆவணப்படுத்தற் செயற்பாடுகளை மேற்கொண்டு ஒவ்வொரு காலத்திற்குமுரிய சடங்குசார் முறைகளும், அவற்றிற்குரிய மொழிப்பயன்பாடுகளும் நம் சமுதாயத்திலிருந்து மறைந்து போகாமல் பேணப்பட வேண்டியது அவசியமானதென இந்த ஆய்வு பரிந்துரை செய்கிறது.*

**திறவுச்சொற்கள்:** சடங்குகள், வழக்கொழிந்துபோகும் சொற்கள், இந்துசமுதாயம், மொழிப்பயன்பாடு, பண்பாடு.

[1]*மொழியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
sivamoorthy18@gmail.com

## அறிமுகம்

மொழியும் பண்பாடும் மிக நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளன. மனிதனின் வாழ்வோடு பின்னிப்பிணைந்திருப்பது மொழி. மொழி சமூகத்தைக் காட்டும் கண்ணாடி. ஒரு மனிதன் தனது கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கான ஒரு வகை ஊடகம் மொழி. மொழியும் சமுதாயமும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று இருக்கின்றதோ, அதேபோல சமயமும் மொழியும் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை வெளிப்படுத்துவது. பண்டைய காலங்களில் மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தது. சமயம் என்பது சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்ந்தது. சமுதாயத்தில் நாம் செல்லும் பாதையைக் காட்டும் ஒரு திசைகாட்டியாக சமயம் விளங்குகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இந்துசமயம், கிறிஸ்தவசமயம், முஸ்லீம் சமயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சடங்கு முறைகளும் சமயத்துக்குச் சமயம், பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டு அமைகின்றன. சடங்குகள் கிராம, நகர மக்களிடையே ஆழ வேர் ஊன்றி இருப்பினும் நகரத்தில் வாழும் மக்களைவிட கிராம மக்கள் சடங்குகளை மேற்கொள்ளும் போது இயன்றளவில் சமயச்சடங்குகளைப் பின்பற்றியே வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாண இந்து சமுதாயத்தைப் பொறுத்த வரையில் சடங்கு நடைமுறைகளின் போது பயன்படுத்தப்படும் சொற்கள் பல வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. ஒரு சமுதாயமானது பிற சமுதாயத்துடன் பழகுகின்ற போது பல புதிய சொற்கள் உருவாகின்றன. இந்து சமயப் பாரம்பரியத்தில் சடங்குகள் மங்கள நிகழ்வுச் சடங்குகள், அமங்கல நிகழ்வுச் சடங்குகள், கிராமிய வழிபாடு, கோயில் கிரியை முறையுடன் தொடர்புடைய சடங்குகள் எனப் பலவகையாகப் பார்க்க முடிகிறது. எனினும் ஆய்வின் எல்லை கருதி குறிப்பிட்ட சில சடங்குச் சொற்களே ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வுக்கட்டுரையானது யாழ்ப்பாண இந்து சமுதாயத்தில் சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் மொழிப்பயன்பாட்டின் போக்கினை ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. சடங்கு சார்ந்த மொழிப்பயன்பாட்டுச் சொற்களை அடையாளம் காணலும் அவற்றின் தற்காலப் போக்குத் தொடர்பாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வின் மூலங்கள்

இந்த ஆய்வானது முதல்நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. முதல் நிலைத் தரவாக பங்குபற்றா அவதானிப்பு முறை (Non – participant observation method) எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இரண்டாம் நிலைத்தரவாக ஆய்வோடு தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள் என்பன அமைகின்றன.

### ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வினை நியாயித்தலும்

இந்து சமுதாயச் சடங்குகள் சார்ந்த சொற்கள் தற்காலத்திலும் மொழிப்பயன்பாட்டில் உள்ளனவா? அல்லது வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கின்றனவா? அதற்கான காரணங்கள் எவை? என்பவை ஆய்வுப் பிரச்சினைகளாகக் கொள்ளப்படுகின்றன. இவ்வினாக்களினை நாம் ஆராய்வோமாயின், பேச்சுமொழி ஒன்றின் நிலையையும் அதன் நிலைபேற்றினையும் குறிப்பிட்ட காலத்திற்குக் காலம் ஆய்விற்கு உட்படுத்த வேண்டியது முக்கிய செயற்பாடாகும். இந்தவகையில் யாழ்ப்பாணப் பிரதேச இந்து சமுதாயத்தில் சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் பல சொற்கள் இன்று வழக்கிழந்து போய்க்கொண்டிருப்பதனைக் காணலாம். எனவே இந்த ஆய்வுத் தலைப்பானது தேவைக்குரிய ஒன்றாகக் காணப்படுகிறது. சடங்குகள் சார்ந்த சொற்கள் தொடர்பாக பல ஆய்வுகள் இடம்பெற்றிருந்தாலும் தற்காலத்தில் அதன் போக்குத் தொடர்பாக ஆய்வு செய்யவேண்டிய தேவை உள்ளது.

### சடங்குகள் மூலம் வெளிப்படுத்தப்படும் மொழிப்பயன்பாடும் தற்காலத்தில் அவற்றின் போக்கும்

இச்சடங்குகளை நிகழ்த்தும் போது அது தொடர்பாகப் பல சொற்பிரயோகங்களைப் பயன்படுத்துவதனை அன்றாடப் பேச்சுச் சூழலில் அவதானிக்கலாம்.

யாழ்ப்பாண இந்து சமயச் சடங்கு சார்ந்த சொற்களைப் பிரதானமாக,

1. வாழ்க்கை வட்டச்சடங்குகளுடன் தொடர்புடைய சொற்பிரயோகம்
   (i). மங்கலச் சடங்குகள் தொடர்பான சொற்பிரயோகம்
   - திருமணச் சடங்கு சார்ந்த சொற்கள்
   - பூப்பெய்தல் சடங்கு சார்ந்த சொற்கள்

   (ii). அமங்கலச் சடங்கு சார்ந்த சொற்பிரயோகம்
   - மரணச் சடங்கு சார்ந்த சொற்கள்
2. கிராமிய வழிபாட்டுச் சடங்குகளுடன் தொடர்புடைய சொற்பிரயோகம்

என்ற அடிப்படையில் பகுக்க முடிகிறது.

முதலில் மங்கலச் சடங்குகள் தொடர்பான சொற்பிரயோகத்தினை அவதானிப்போமாயின்,

1. **வாழ்க்கை வட்டத்துடன் தொடர்புடைய சொற்பிரயோகம்**
   **மங்கலச் சடங்குகள் தொடர்பான சொற்பிரயோகம்**

**• திருமணச் சடங்கு சார்ந்த சொற்கள்**

மனித வாழ்வியற் கோலங்களில் திருமணம் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இங்கு ‘பேச்சுக்கால்’ என்ற சொற்பிரயோகம் மிக முக்கியமானது. அதாவது பெரியோர்கள் கூடி இரு பகுதியினரதும் உறவைத் தெளிவாகப் பேசுகின்ற நிகழ்வு பேச்சுக்கால் எனக் குறிப்பிடப்படுகிறது. ‘பேச்சுக்கால்’ என்பது தற்காலத்தில் சமுதாயத்தில் பயன்பாட்டில் உள்ள

சொற்பிரயோகமாகக் காணப்பட்டாலும் அதிகமாக வயதில் முதிர்ந்தவர்களிடையே பயன்பாட்டில் இருப்பதை அவதானிக்கலாம். எனினும் தற்காலத்தில் திருமணக் குறிப்புக் கொடுக்கின்ற தரகர் திருமணம் பொருத்துகின்ற நிகழ்வினையும் 'பேச்சுக்கால்' என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்திக் கூறுவதை அவதானிக்கலாம்.

மேலும் திருமணம் செய்வது என்ற முடிவுக்கு இரு பகுதியினரும் வந்த பின்னர் பேச்சு நடந்த வீட்டில் பால் முதலான பானங்களை அருந்தி உறவினை இறுக்கமாக்கிக் கொள்கின்ற செயற்பாட்டை வெளிப்படுத்த 'கை நனைப்பு' என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்துவர். இதனை தற்காலத்தில் வழக்கிழந்த சொல்லின் பட்டியலிலேயே அடக்க முடிகிறது.

வேள்வு காவுதல், முகூர்த்தக்கால், சம்மந்தம், பந்திப்பாய், சபைசந்தி, செம்பும் தண்ணியும், பூதாக்கலம், மரு உண்ணுதல், கால் மாறுதல் போன்ற சொற்களின் பயன்பாட்டினை அவதானிக்குமிடத்து, முதல் 'வேள்வு காவுதல்' என்ற நடைமுறையானது ஆரம்பத்தில் பேச்சுக்கால் முற்றாகிய பின்னர் பெண்வீட்டிலிருந்து அவித்த கொழுக்கட்டையும் கப்பல் வாழைப்பழமும் ஆண் வீட்டிற்கு எடுத்துச் செல்வது மரபு. இங்கு வாழைப்பழம் மஞ்சள் நிறமுடையதாகவும் கரும்புள்ளிகள் அடையாளம் காணப்படக்கூடாது என்பது நம்பிக்கையாகவும் காணப்பட்டது.'வேள்வு காவுதல்' என்ற சொற்பிரயோகமானது தற்காலத்தில் வழக்கிழந்த சொல்லாகக் காணப்பட்டாலும் இன்று இச்சடங்குமுறைக்கு 'சம்மந்தக்கலப்பு' (சம்பந்தக்கலப்பு) என்ற சொற்பிரயோகத்தை உபயோகிக்கின்றனர். ஆண் வீட்டிற்கு கொழுக்கட்டை, பழவகைகள், பூ, தேங்காய் ஏனைய உபசாரப் பொருட்களுடன் செல்வது தற்கால வழக்கமாகிவிட்டது.

அடுத்து 'முகூர்த்தக்கால்' என்பது கிராமிய வாழ்க்கை முறையுடன் தொடர்புடைய சொற்பிரயோகம். ஒரு பிரதேசத்தில் மூலை முடுக்குகளில் பயன்படுத்தப்படும் சொற்பிரயோகமாகக் காணப்படுகிறது. தற்காலத்தில் அதிகமாக 'கன்னிக்கால்' நடல் என்ற சடங்கு முறைச் சொல் அதிகமான பயன்பாட்டில் உள்ளது. 'முகூர்த்தக்கால்' என்பது வழக்கிழந்து போய்க்கொண்டிருக்கின்ற சொல்வரிசையிலேயே அவதானிக்க முடிகிறது.

'பந்திப்பாய்' என்பது வீட்டில் இடம்பெறும் மங்கல, அமங்கல நிகழ்வுகளுக்கு உணவு பரிமாறுவதற்காகப் பயன்படுத்தப்படும் புழங்கு பொருட்களில் ஒன்று. புல்லால் ஆக்கப்பட்ட நீளமான ஒடுங்கிய அமைப்பைக் கொண்ட ஒரு வகைப்பாய். இப்பாயில் அமர்ந்து வாழை இலையில் உணவு பரிமாறுவர். தற்காலத்தில் நமது பண்பாட்டின் மாற்றம் காரணமாக புழங்கு பொருளின் பாவனை இல்லாது போகின்ற நிலையில் சொல்லின் நிலையும் வழக்கிழந்ததாகவே காணப்படுகிறது.

'சபைசந்தி' என்ற சொல்லினை அவதானிக்குமிடத்து, வீட்டில் இடம்பெறும் மங்கல, அமங்கல நிகழ்வுகளாயினும் உறவினர்கள் அந்நிகழ்வுகளில் பங்கு கொண்டு அவ்வீட்டில் உணவு உண்பது வழக்கம். அந்நிகழ்வுகளில் முழுமையாகப் பங்குபற்றி உணவு உண்டு, குறிப்பிட்ட சடங்குகளின் சபை சந்திகளைச் சிறப்பிக்கும் நிகழ்வைச் சில காலங்களிற்கு முன்பு 'சபைசந்தி' என்று அழைப்பது மரபாகக் காணப்பட்டது. எனினும் தற்காலத்தில் இச் சொல் அதிகமாக கிராமப் பகுதிகளில் முதியவர்களிடையே அதிகம் பயன்படுத்தும் வழக்காகக் காணப்படுகிறது.

வீட்டில் இடம்பெறும் சடங்குகளில் உணவு பரிமாற முன்பு வயதில் மூத்த ஆண் ஒருவருக்கு மரியாதையின் குறியீடாக கை கழுவுவதற்காக செம்பில் தண்ணீர் கொடுத்தல் நிகழ்வு இடம்பெறும். 'செம்பு' என்கின்ற புழங்கு பொருள் தற்காலத்தில் நகரத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைக் கோலத்தில் இருந்து மறைந்த பொருளாகக் காணப்படுகிறது. நவீன நாகரிக வாழ்க்கை முறையுடன் கூடுதலாக ஒட்டி வாழும் மக்களின் பயன்பாட்டுச் சொல்லாக இதனைக் குறிப்பிட முடியாது. 'செம்புந்தண்ணியும்' என்ற சொற்பிரயோகமானது தற்காலத்தில் சில பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற பாரம்பரியத்தைக் கொண்டிருந்தாலும் வழக்கிழந்து போய்க்கொண்டிருக்கின்ற தன்மையையே அதிகம் அவதானிக்கமுடிகின்றது.

அடுத்து, திருமணச்சடங்குகளில் நிகழும் முக்கிய நிகழ்வாக 'பூதாக்கலம்' என்பதும் ஒன்றாகும். ஆண், பெண் இருவரும் திருமண நிகழ்வு முடிந்த பின்பு ஒரே இடத்தில் முதன்முதல் உணவு உண்ணுதல், 'மரு உண்ணுதல்', 'பூதாக்கலம்' உண்ணுதல் என்ற சடங்குச் சொல்லால் குறிப்பிடப்படும். 'மரு உண்ணுதல்' என்பது தற்காலத்தில் வழக்கிழந்த சொல்லாகவே குறிப்பிட முடிகிறது. எனினும் 'பூதாக்கலம்' உண்ணுதல் என்பது ஓரளவு வாழ்ந்து கொண்டிருக்கும் சொற்பிரயோகமாகக் குறிப்பிட முடிகிறது.

- **பூப்பெய்தல் சடங்கு சார்ந்த சொற்கள்**

இந்து சமுதாயத்தில் இடம்பெறும் மங்கல நிகழ்வுகளில் அடுத்து பூப்புனித நீராட்டு விழாச்சடங்கும் முக்கியமானது. இங்கு 'குப்பைத்தண்ணீர்வார்வை' என்ற சடங்கு மேற்கொள்ளப்படும். பெண்ணின் முதற்பூப்பின் போது நிகழும் நீராட்டினை இது குறிக்கின்றது. 'குப்பைத்தண்ணீர்வார்வை' என்ற சொற்பிரயோகமானது தற்காலத்தில் இளம் சமுதாயத்தினரி டையே பயன்பாட்டில் இல்லாத சொற்பிரயோகமாகக் காணப்பட்டாலும் வயதில் முதிர்ந்த பெண்கள் சமூகத்தில் இச்சொற்பயன்பாட்டினை அவதானிக்கலாம்.

அடுத்து 'நிறைநாழி' எனும் சொற்பிரயோகம் இங்கு முக்கியமான ஒன்றாகும். 'கொத்து' என்கின்ற புழங்கு பொருளே இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. 'நிறைநாழி' என்பது சூழ்நிலைப் பொருளாகும். (Contextual meaning) சூழ்நிலையின் பொருட்டு பயன்படுத்தப்படும்

சொற்பிரயோகமாகக் காணப்படுவதனால் சூழ்நிலைப் பொருளாகக் கொள்ளப்படுகின்றது (Suseendirarajah, S., 1999). இச் சடங்கில் பயன்படுத்தப்படும் மிக முக்கிய பொருளாகச் 'சத்தகம்' காணப்படுகிறது. சத்தகம் என்பது தற்காலத்தில் பாவனையில் உள்ள புழங்கு பொருள் அல்ல. கிராமச் சூழலிலேயே இத்தகைய புழங்கு பொருளைக் காண முடிகிறது. கொத்து, சத்தகம் போன்ற புழங்கு பொருட் சொற்கள் இன்று வழக்கிழந்து போய்க்கொண்டிருக்கின்ற சொற்பிரயோகங்களாகக் குறிப்பிட முடிகிறது.

**(ii). அமங்கலச் சடங்கு சார்ந்த சொற்பிரயோகம்**

**மரணச் சடங்கு சார்ந்த சொற்கள்**

இந்து சமுதாயத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகள் இடம்பெற்று வருகின்றன. இறப்புச் சடங்கு, மரணச் சடங்கு எனவும் அழைக்கப்படுகிறது. இந்துக்களின் வாழ்வில் இது முக்கிய சடங்குகளில் ஒன்றாகும். இறந்தவரின் உடலை சுடுகாடு நோக்கிக் காவிச் செல்லல் என்பது முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. குறிப்பிட்ட காலங்களிற்கு முன்பு இறந்தவரின் உடலைப் 'பாடை' இல் காவுகின்ற மரபு காணப்பட்டது. தற்காலத்தில் பிற கலாசாரங்களின் ஊடுருவலின் தாக்கத்தால் இம்மரபு மறைந்து போய்க்கொண்டிருக்கிறது. இதனால் 'பாடை' என்ற சொற்பிரயோகமும் வழக்கிழந்து போய்க்கொண்டிருக்கின்ற சொற்பிரயோகமாக இனங்காணப்படுகிறது.

'சுண்ணம் இடித்தல்' என்கின்ற சடங்கும் மிக முக்கிய சடங்குகளில் ஒன்றாகும். உரலில் அறுகு, மஞ்சள் மா இட்டு மந்திரம் சொல்லி மூன்று தரம் இடித்து திருப்பொற்சுண்ணப்பாட்டுப் பாடப்படும் 'சுண்ணம் இடித்தல்' என்கின்ற சொற்பயன்பாடு இன்றும் இந்துசமுதாயத்தில் வழக்கில் உள்ள ஒன்றாகக் காணப்படுகிறது. அதேபோன்று 'கொள்ளிக்குடம்' என்பதும் இந்து சமுதாயத்தில் மரணச் சடங்கில் வழக்கில் உள்ள சொற்பிரயோகமாக இனங்காணப்படுகிறது.

**2. கிராமிய வழிபாட்டுடன் தொடர்புடைய சொற்பிரயோகம்**

ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை கிராமிய வழிபாடு என்பது முக்கியம் பெறுகின்ற ஒன்றாகும். வைரவர், அண்ணமார், காளி எனப் பல தெய்வங்கள் கிராமிய வழிபாட்டுடன் தொடர்புபடுகின்றன. கிராமிய வழிபாட்டில் 'மடைபரவல்' என்பது முக்கிய நிகழ்வாகும். வருடத்தில் ஒருநாள் பொங்கல் மடை பரவி வேள்வியிலே பெருமளவான ஆடு, கோழி பலியிடல் அண்ணமாருக்குச் சிறப்பான வழிபாடாக இருந்து வருகிறது (சண்முகலிங்கன், என்., பக்தவத்சலபாரதி, எஸ்., 2004). எனினும் தற்காலத்தில் கிராமிய வழிபாடுகள் குறைந்து செல்கின்ற நிலையில் 'மடைபரவல்' வழிபாடும் அருகிவருவதனைப் பார்க்க முடிகிறது. எனினும் நம்பிக்கை, கிராமிய தெய்வங்களின் மேல் உள்ள பயம் போன்ற

காரணங்களால் இன்றும் இவ்வழிபாட்டு மரபுகள் வழக்கில் இருந்தே வருகின்றன. பொதுவாக ஆகம மரபு சார்ந்த பூசை வழிபாடுகளில் பொங்கல், ஏனைய உணவுப்பொருட்களைப் படைக்கும் நிகழ்விற்குப் 'படையல்' என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்துவர். அடுத்து 'பலியிடல்' என்ற வழிபாட்டு மரபும் தற்காலத்தில் தடை செய்யப்பட்ட வழிபாட்டு முறையாகக் காணப்படுவதனால் இச்சொல் தற்போது வழக்கிழந்து போய்க்கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

**முடிவுகளும் பரிந்துரைகளும்**

யாழ்ப்பாண இந்துசமுதாயச் சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் சொற்களின் பயன்பாட்டினைப் பொறுத்தவரை பெருமளவான சொற்கள் தற்காலத்தில் வழக்கொழிந்து செல்வதுடன், சில சொற்கள் சொற்பொருள் (Semantics) அடிப்படையில் மாற்றம் பெற்று விளங்குவதுடன், குறிப்பிட்ட சில சடங்குச் சொற்கள் கிராமிய வாழ்க்கை முறையில் முதியோர்களின் மொழிப்பயன்பாட்டில் வாழ்ந்து வருவதனையும், சடங்கு முறைகளில் மிகவும் குறைந்த அளவு எண்ணிக்கை உடைய சொற்களே தற்காலத்தில் வாழ்ந்து வருவதனையும் அவதானிக்க முடிகிறது. அதற்குரிய காரணங்களாக, பிறநாட்டார் தொடர்பு, கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறம் நோக்கிய மக்கள் இடப்பெயர்வு, நாகரிகப் போக்கு, பிறமொழித் தாக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு சமுதாயத்தினுடைய பண்பாடானது காலங்காலமாக அழியாது பேணிக்காக்கப்பட வேண்டிய ஒன்று. இந்தவகையில் யாழ்ப்பாண இந்துசமுதாயத்தின் சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் சொற்கள் இந்து சமுதாயத்தின் பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. எனவே இத்தகைய சடங்குசார் முறைகளும், அதனோடு தொடர்புடைய மொழிப்பயன்பாட்டுச் சொற்களும் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துக்கள் ஆகும். இத்தகைய சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்ற போது ஒரு சமுதாயத்தின் பண்பாடு காலங்காலமாக ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு சமுதாயத்தின் கையிலும் கொடுக்கப்பட்டு வருகின்ற மரபினைக் காணலாம். எனவே எந்தவொரு பண்பாடும் அழியாது நிலைபெறுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கலாம் என்பது திண்ணம்.

இந்த ஆய்வுக்கட்டுரையின் ஊடாக தற்காலத்தில் வழக்கிழந்து போய்க்கொண்டிருக்கும் சடங்குசார் சொற்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பரிந்துரைகள் இந்த ஆய்வினூடாக முன்வைக்கப்படுகின்றன.

- ஒரு சமுதாயத்தில் வழக்கில் உள்ள மொழிப்பயன்பாடு, ஆவணப்படங்கள் என்பன நூலகங்கள், அருங்காட்சியகங்களில் அச்சில் ஆவணப்படுத்தல்,
- இலத்திரனியல் ஊடகங்களில் ஆவணப்படுத்தல்,
- இறுவட்டில் (CD) இல் ஆவணப்படுத்தல்.

- இவற்றை இலத்திரனியல் நூலக முறைமைக்குள் கொண்டு வருதல்.
- இவை தவிர்ந்த வேறு ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு ஒவ்வொரு காலத்திற்குமுரிய சடங்குசார் முறைகளும், அவற்றிற்குரிய மொழிப்பயன்பாடுகளும் நம் சமுதாயத்திலிருந்து மறைந்து போகாமல் பேணப்பட வேண்டியது அவசியமான ஒரு விடயமாகும்.

## உசாத்துணை

சண்முகலிங்கன், என்., பக்தவத்சலபாரதி, எஸ். (2004). இலங்கை இந்திய மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம். பக்: 31-34.

Suseendirarajah, S. (1999). Religion and Language in Jaffna Society. In: Balasubramanian, K., Ratnamalar, K.and Subathini, R., eds. Studies in Sri Lankan Tamil Linguistics and Culture. Jaffna: University of Jaffna, pp. 139-162.